# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 டிசம்பர் 14, 2024

Weekly E-paper • December 14, 2024



## உள்நோக்கத்தை மறைத்து... ஒரே நாடு ஒரே தேர்தல் !

சுப. வீரபாண்டியன்

**அரிட்டாபட்டி டங்ஸ்டன் சுரங்கமும் மாநில உரிமையும்!**

வாஞ்சிநாதன்

**கருஞ்சட்டைப் பதிப்பக நூல் வெளியீட்டு விழா**

**வைக்கம் போராட்ட நூற்றாண்டு**

தலையங்கம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 டிசம்பர் 14, 2024 Weekly E-paper ● December 14, 2024


# உள்நோக்கத்தை மறைத்து... ஒரே நாடு ஒரே தேர்தல் !

சுப. வீரபாண்டியன்

*2014 இல் பிரதமர் மோடியின் தலைமையில், ஒன்றிய பாஜக அரசு ஏற்பட்ட நாளிலிருந்து, இந்த "ஒரே நாடு ஒரே தேர்தல் " என்னும் முழக்கம் தொடர்ந்து எழுப்பப்பட்டுக் கொண்டே இருக்கிறது!*

*ஏன் தேர்தல்கள் ஒரே நேரத்தில் நாடு முழுவதும் நடத்தப்பட வேண்டும் என்பதற்கு, வெளிப்படையாகச் சொல்லப்படுகின்ற காரணங்கள் இரண்டு! ஒன்று, நாட்டின் பொருளாதாரம் தேர்தல்களிலேயே பெருமளவு முடங்கி விடுகிறது என்பது! இரண்டு, இந்தியாவின் ஒற்றுமையை அது வலுப்படுத்துகிறது என்பது!*

*இதுவரையில் வெறும் பேச்சாக இருந்த இந்தத் திட்டம், 12 .12 .24 அன்று, இந்திய ஒன்றிய அரசு அமைச்சரவையின் ஒப்புதலையும் பெற்றுவிட்டது! இந்தக் குளிர்கால நாடாளுமன்றத் தொடரிலேயே, அதற்கான முன்வரைவுத் திட்டமும் கொண்டு வரப்படும் என்று தெரிகிறது!*

*இத்திட்டத்தை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்து வருகின்றன. அதற்குச் சொல்லப்படும் அடிப்படையான காரணங்களையும் நாம் பார்க்க வேண்டும்!*

*நாடு முழுவதும் ஒரே நேரத்தில் தேர்தல் என்றால், சட்டமன்றங்கள், நாடாளுமன்றத்திற்கு மட்டுமா அல்லது உள்ளாட்சித் தேர்தல்களையும் சேர்த்தா என்று ஒரு கேள்வி இருக்கிறது. சட்டமன்றத் தேர்தலை மட்டும் நாடாளுமன்றத் தேர்தலோடு இணைக்கிறோம் என்றாலும், ஏதேனும் ஒரு மாநில சட்டமன்றத்தில், எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்றால், அந்த மாநிலம் அடுத்துத் தன் அரசை அமைத்துக் கொள்ள ஐந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமா என்பது மிகப்பெரிய கேள்வியாக இருக்கிறது! இடையில், கட்சித் தாவுகின்றவர்களால் ஆட்சி கலைந்து விடும் என்றால், அப்போதும் அடுத்த சில ஆண்டுகளுக்கு அந்த மாநிலத்தில் அரசு என்று ஒன்று இருக்காதா என்பதும் நம் முன் இருக்கும் கேள்விக்குறி!*



*இவற்றையெல்லாம் தாண்டி, இந்தத் திட்டத்திற்குள் ஒரு பெரிய உள்நோக்கம் இ ஒளிந்திருக்கிறது என்று தெரிகிறது! எந்த மாநிலச் சட்டமன்றத்தில் பெரும்பான்மை இல்லை என்றாலும், அங்கே குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைக்கு வந்துவிடும். அதேபோல, ஏதேனும் ஒரு ஆட்சியைக் கவிழ்த்து விட்டால், அங்கும் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வந்து விடலாம்.*

*ஆக மொத்தம், மக்களாட்சி முறையைச் சீர்குலைத்து, குடியரசுத் தலைவர் ஆட்சி என்னும் பெயரில், சர்வாதிகார ஆட்சி முறையை நாட்டில் கொண்டு வருவதே ஒரே நாடு ஒரே தேர்தல் என்னும் முழக்கத்திற்குள் ஒளிந்திருக்கும் உள்நோக்கம் என்றே தோன்றுகிறது!*

*மக்களே எச்சரிக்கை!*

# அரிட்டாபட்டி டங்ஸ்டன் சுரங்கமும் மாநில உரிமையும்!

**வாஞ்சிநாதன்**

மோடியின் நெருங்கிய நண்பர் , உலகின் மிகப்பெரிய பன்னாட்டு முதலாளியான அனில் அகர்வாலின் வேதாந்தா நிறுவனத்தால், மீண்டும் தமிழ்நாட்டில் மிகப்பெரிய பிரச்சனை உருவாகியுள்ளது. மதுரை மாவட்டம் அரிட்டாபட்டி மலைத்தொடரில் உள்ள ஏழு மலைகள் மற்றும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் உள்ள அரிய வகை டங்ஸ்டன் கனிமத்தைக் குறிவைத்து களம் இறங்கியுள்ளது வேதாந்தாவின் துணை நிறுவனமான ஹிந்துஸ்தான் ஜிங்க். நவம்பர் 7, 2024 அன்று மோடி அரசின் கனிமவளத்துறை நடத்திய ஏலத்தில் பல்வேறு மாநிலங்களில் உள்ள எட்டு கனிமவள தொகுப்புகள் ஏலம் விடப்பட்டு அதில் நான்கு தொகுப்புகள் வேதாந்தா மற்றும் அதன் துணை நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன வேதாந்தா நிறுவனம், தேர்தல் பத்திர முறைகேட்டில் பாஜகவுக்கு 227 கோடி வழங்கியதும், சுற்றுச்சூழல் சட்டத்தையே வேதாந்தாவுக்காக மோடி திருத்தியதும் நாம் அறிந்ததே. தூத்துக்குடி ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டத்தில் 13 பேர் பட்டப் பகலில் சுட்டுக் கொல்லப்பட்டதற்குக் காரணமாமும் வேதாந்தாதான். தென்னாப்பிரிக்கா உட்பட உலகம் முழுவதும் ரத்தக் கறைகளைக் கொண்ட வேதாந்தாவால்தான் தற்போது மதுரையிலும் பிரச்சனை.




மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் 21 க்கு மேலான கிராமங்களைப் பாதிக்கும் வகையில் 2015.51 ஹெக்டர் - சுமார் 5000 ஏக்கர் நிலம் நவம்பர் 7, 2024 - ல் வேதாந்தாவுக்கு மோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தனது சுரங்கப் பணியைத் தொடங்கினால் என்னவாகும்?

மதுரை மாவட்டம் அரிட்டாபட்டி மலைத்தொடர், தமிழ்நாட்டின் மிக முக்கியமான பல்லுயிர் மற்றும் பண்பாட்டு மண்டலமாகும். கருங்குருவி, மழைக்குருவி, இரட்டைவால் குருவி, சில்வர் பில் கொக்கு மஞ்சள்வாலாட்டி, பனங்காடை, சிவப்பு ஆட் காட்டி, மஞ்சள் ஆட் காட்டி, கருந்தேள், வல்லூறு, செம்பருந்து, ராசாலி, குட்டை கால் கழுகு, லகுடு என்ற அரியவகை வல்லூறு உள்ளிட்ட 250 வகையான பறவை இனங்கள், அரிய வகைத் தேவாங்குகள் எறும்பு தின்னி மலைப்பாம்பு, 700 க்கும் மேற்பட்ட பூச்சி இனங்கள் இம்மலைத் தொடரில் உள்ளன. முல்லைப் பெரியாறு பாசனத்தால் 25,000 ஹெக்டேரில் சிறப்பாக விவசாயமும் இங்கு நடைபெற்று வருகிறது.

மிக முக்கியமாக 2200 ஆண்டுகளுக்கு முன்பான தமிழி எழுத்துக்களால் ஆன மாங்குளம் கல்வெட்டு, சமணர் படுகைகள், பாண்டியர் கால குடைவரைகள், நாட்டார் - இஸ்லாமியர் வழிபாட்டுத்தலங்கள், சங்க கால கற்படுக்கைகள் என பல்வேறு பண்பாட்டுச் சின்னங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் இப்பகுதி தமிழ் பண்பாட்டின் வரலாற்று அடையாளம்.

எப்போதும் லாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட வேதாந்தாவும், தமிழர் பண்பாட்டை அழிக்க முயலும் பாஜகவும், கூட்டுச் சேர்ந்து அரிட்டாபட்டி பகுதியை அழிக்க முயல்கிறார்களோ என்ற சந்தேகம் இப்பகுதி மக்களுக்கு எழுந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாவே ஆய்வு என்ற பெயரில் வந்த அதிகாரிகளை இப்பகுதி மக்கள் மடக்கி விளக்கம் கேட்ட போது, உரிய பதில் சொல்லாததால் விரட்டி அடிக்கப்பட்டார்கள். இதன் தொடர்ச்சியாக யாருக்கும் தெரியாமல் ஒன்றிய அரசு ஏலம் நடத்தி அரிட்டாபட்டியைத் தாரை வார்த்துள்ளது. குறிப்பாக சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தில் ஆகஸ்ட் 2023 -ல் மோடி அரசு கொண்டுவந்த ஒரு சட்டத்திருத்தம்தான், தமிழ்நாடு அரசின் ஆட்சிப் பரப்பில் உள்ள 5000 ஏக்கர் நிலத்தை, மாநில அரசுக்குத் தெரியாமல், ஒன்றிய அரசே ஏலம் விடும் அதிகாரத்தை வழங்கியுள்ளது. இச்சட்ட திருத்தம் கொண்டு வந்த போது இந்தியா கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தன. ஆனால் அதிமுக வரவேற்றது.

மாநிலங்களின் ஒன்றியம்தான் இந்திய நாடு, கூட்டாட்சி என்பது இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கூறு என்று வரையறுக்கப்பட்டுள்ள நிலையில், சுரங்க சட்டத்தில் ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள திருத்தம் மாநில மக்களின் உரிமையை முழுமையாகப் பறிக்கிறது. இந்தியாவின் எந்தப் பகுதியில் உள்ள எந்த நிலத்தையும், மாநில அரசைக் கேட்காமல், எந்த நிறுவனத்துக்கும் வழங்கும் உரிமையை

தொடர்ச்சி கடைசி பக்கம்...

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## வைக்கம் போராட்ட நூற்றாண்டு

தந்தை பெரியாரின் வைக்கம் போராட்ட நூற்றாண்டு நிறைவு விழா கடந்த 12.12.2024 அன்று கேரள மாநிலம் வைக்கத்தில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

"வைதிக இந்துக்கள் கொண்டிருக்கும் வெறியைப் போக்க நமக்கு ஒரு வழிதான் உள்ளது. அதாவது அவர்களுடன் நாம் பொறுமையுடன் விவாதம் செய்தும் சரியாக நடந்தும்தான் அவர்களை அதனைக் கைவிடும்படி செய்யக்கூடும்" என்று காந்தி தனது யங் இந்தியா இதழில் கட்டுரை எழுதிக் கொண்டிருந்தபோது, போராட்டக் களத்திற்கு நேராகச் சென்று, போராடி அதன் விளைவாகக் கடுமையான சிறைக் கொடுமைகளையும் எதிர்கொண்டவர் பெரியார்.

தந்தை பெரியாரின் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்க போராட்டம், வைக்கம் போராட்டமாகும். கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் நடப்பதற்குக் கூட அனுமதி மறுக்கப்பட்ட அவலம் நடந்த அக்காலகட்டத்தில் போராட்டத்தைத் தீவிரப்படுத்தி வெற்றி பெறச் செய்தது பெரியாரின் போராட்டத்தின் விளைவே. மிக முக்கியமாக, இந்தக் கிளர்ச்சியில் முதலில் பங்குபெற்றவர்கள் பெரியாரின் குடும்பத்துப் பெண்கள் என்று வைக்கம் போராட்ட வரலாற்றை ஆவணப்படுத்தியுள்ள ஆய்வாளர் பழ.அதியமான் குறிப்பிடுகிறார். வைக்கம் போராட்டம் அண்ணல் அம்பேத்கரின் மகத் குளப் போராட்டத்திற்கு வழிகாட்டியாக அமைந்தது.

இன்று அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் அளவிற்கு தமிழ்நாட்டில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்கு பெரியாரின் இயக்கம் விதையாக இருந்தது. என்றாலும் ஜாதியைப் பாதுகாக்கும் சமூகமும், அரசியலமைப்புச் சட்டமும் இருக்கும் வரையில் பார்ப்பனியம் ஏதாவது ஒரு முறையில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். எனவே சமூக மாற்றத்திற்கான பரப்புரையைத் தொடர்ந்து மேற்கொள்வதோடு, தந்தை பெரியார் அரசியலமைப்பில் கோரிய மாற்றங்களைத் தொடர்ந்து வலியுறுத்துவதே வைக்கம் நூற்றாண்டில் நாம் முன்னெடுக்க வேண்டிய பணியாகும்.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**
இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை- 600 024,**
தொலைபேசி: 044-2472 6408

## தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்களுக்கான திட்டங்கள்

| வ.எண் | திட்டம் | வகுப்பு |
|---|---|---|
| 1 | விலையில்லாப் பாடநூல்கள் | I-XII |
| 2 | விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் | I-X |
| 3 | விலையில்லாப் புத்தகப்பை | I-XII |
| 4 | விலையில்லா சீருடை | I-VIII |
| 5 | காலை உணவுத் திட்டம் | I-X |
| 6 | மதிய உணவுத்திட்டம் | I-VIII |
| 7 | விலையில்லாக் காலணிகள் | I-X |
| 8 | விலையில்லாப் பேருந்து பயண அட்டை | I-XII |
| 9 | விலையில்லா மிதிவண்டி | XI |
| 10 | விலையில்லா வண்ணப் பென்சில்கள் | I-V |
| 11 | விலையில்லா கணித உபகரணப்பெட்டி | VI-X |
| 12 | விலையில்லா புவியியல் வரைபட நூல் | VI-X |
| 13 | இடைநிற்றலை குறைப்பதற்கான, சிறப்பு ஊக்கத்தொகை | X-XII |
| 13 | வருவாய் ஈட்டும் குடும்பத்தலைவரை இழந்த குழந்தைகளுக்கான நிதி உதவி | I-XII |

## மூன்று நூல்கள் அறிமுகக் கூட்டம்



இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் சார்பில் 10.12.2024 மாலை, காரைக்குடி ஹோட்டல் ஜெகன் அரங்கத்தில் நடைபெற்ற மூன்று நூல்கள் அறிமுகக் கூட்டம் மிகச்சிறப்பாக நடந்தேறியது. பல்வேறு தரப்பில் தரப்பில் இருந்தும் நண்பர்கள், தோழர்கள், அறிஞர் பெருமக்கள் திரளாக வந்திருந்து நிகழ்வைச் சிறப்பித்தனர்.

காரைக்குடி மாநகர மேயர் சே.முத்துத்துரை தலைமையேற்றார். துணை மேயர்நா.குணசேகரன் முன்னிலை வகித்தார். துரை செல்வம் முடியரசன் வரவேற்புரை வழங்க ச.சிதம்பரம் இணைப்புரை வழங்கினார். தோழர் தி.க.கலைமணி விருந்தினர்களுக்குப் புத்தகங்களைப் பரிசளித்தார். பேராசிரியர் மு.சு.கண்மணி, எழுத்தாளர் செம்பை சேவியர் எழுதிய அப்பா இராம சுப்பையா என்ற புத்தகத்தையும் பேராசிரியர் தெ.வெற்றிச்செல்வன், பேரா.சுபவீ எழுதிய ஒன்றே சொல் நன்றே சொல்- தொகுதி 7 என்ற புத்தகத்தையும் மிகச்சிறப்பாக அறிமுகம் செய்து உரையாற்றினர்.

இறுதியாக, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் சுப வீரபாண்டியன், எழுத்தாளர் குமரன் தாஸ் எழுதிய என் அப்பாவுக்குப் படிக்கத் தெரியாது என்ற புத்தகத்தை அறிமுகம் செய்தும் இன்றைய சமூக அரசியல் சூழல் குறித்தும் சிறப்புரையாற்றினார். எழுத்தாளர் குமரன் தாஸ் ஏற்புரையுடனும் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சிவகங்கை மாவட்டச் செயலாளர் நவில் நன்றியுடனும் கூட்டம் நிறைவடைந்தது.

பேரவையின் தென்மண்டலச் செயலாளர் தோழர் இராம. வைரமுத்து, மாநில பிரச்சாரச் செயலாளர் வேடச்சந்தூர் இரவி, மதுரை மாவட்டப் பொருளாளர் ஸ்டுடியோ சரவணன், சிவகங்கை மாவட்டத் தலைவர் வே.பரமேஸ்வரன், காரைக்குடி நகரச் செயலாளர் ந.ஸ்டீபன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கருஞ்சட்டைப் பதிப்பகம்
# நூல் வெளியீட்டு விழா







**22.12.24 ஞாயிறு காலை 10 மணி**
**முத்தமிழ்ப் பேரவை, அடையாறு, சென்னை**

முன்னிலை
திரு **சிற்பி செல்வராஜ்**
திரு **செல்வின் சவுந்தர்ராஜன்**

வரவேற்புரை
திரு **பெல்.ராஜன்**

தொகுப்புரை
திரு **இக்லாஸ் உசேன்**

தலைமை
திரு **சுப.வீரபாண்டியன்**

வாழ்த்துரை
திரு **கரு.பழனியப்பன்**
திரைப்பட இயக்குனர் & சமூகச் செயல்பாட்டாளர்

திரு **சே.மெ.மதிவதனி**
துணைப் பொதுச்செயலாளர். திராவிடர் கழகம்

நன்றியுரை
திரு **திராவிடச்செல்வன்**

புத்தகம் வெளியிட்டுச் சிறப்புரை
மாண்புமிகு **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்
துணை முதல்வர், மற்றும் அலுவல் சாரா துணைத் தலைவர்.
மாநில திட்டக் குழு, தமிழ்நாடு அரசு.

புத்தகம் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை
மாண்புமிகு **டி.ஆர்.பி.ராஜா** அவர்கள்
தொழில்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு.

ஏற்புரை
**ஜெ.ஜெயரஞ்சன்**
செயல் துணைத் தலைவர், மாநில திட்டக் குழு தமிழ்நாடு அரசு

## இரண்டாம் பக்கத் தொடர்ச்சி...

ஒன்றிய அரசுக்கு இச்சட்டத் திருத்தம் அளிக்கிறது. மாநில அரசுகளின் ஒட்டுமொத்த உரிமையும் பறிக்கப்பட்டது குறித்து விவாதம் கூட நம் நாட்டில் நடக்கவில்லை என்பது வருந்தத்தக்கது. சுரங்க ஏலம் குறித்து, மதுரையில் உள்ள மக்கள் இயக்கங்கள், மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்து வெளிக் கொண்டு வந்த நிலையில், 25 கிராம சபைகளில் எதிர்ப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திமுக அமைச்சர் மூர்த்தி அரிட்டாப்பட்டி கூட்டத்தில் கலந்து கொண்டார். தொடர்ந்து தமிழ்நாடு முதல்வர் அவர்கள் சுரங்க ஏலத்தை ரத்து செய்ய வலியுறுத்தி ஒன்றிய அரசுக்குக் கடிதம் எழுதினார். இதன் தொடர்ச்சியாக டங்ஸ்டன் சுரங்க ஏலத்தை ரத்து செய்ய வலியுறுத்தி தமிழக அரசின் சட்டப்பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரிட்டாபட்டி பிரச்சனையில் இரட்டை நிலைப்பாடு எடுக்கும் ஒரே கட்சியாக பாஜக உள்ளது. ஸ்டெர்லைட்டை மூடியது தவறு: டங்ஸ்டன் எடுக்க வேண்டும், இதனால் சில கிராமங்கள் பாதிக்கப்பட்டால் பரவாயில்லை என்று பேசிய பாஜக மாநில தலைவர் அண்ணாமலை மக்களின் எதிர்ப்பால், தன் நிலையை மாற்றிக் கொண்டதாகத் தற்போது நாடகம் ஆடுகிறார். மதுரையின் இதே மேலூர் பகுதியை நாசம் செய்த கிரானைட் குவாரி முதலாளிகளுக்காக ஆதரவாகச் செயல்பட்ட ஒரே கட்சி பாஜகதான்.

தமிழ்நாட்டின் விவசாயம், பொருளாதாரம் பல்லுயிர் சூழல், பண்பாட்டு சுவடுகள் உள்ளிட்ட அனைத்தையும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அழிப்பதற்கு துடிக்கிறது பாஜக. தனியார் மய, தாராள மய, உலக மயக் கொள்கையின்கீழ் வளர்ச்சி என்ற பெயரில், பன்னாட்டு முதலாளிகள் நலனுக்காக வாழ்விடங்களில் இருந்து மக்களை வெளியேற்றுவது தொடர்ந்து நடந்து வருகிறது. இதனால் நாடு முழுவதும் லட்சக்கணக்கான மக்கள் சொந்த நாட்டில் அகதிகளாக இடம் பெயர்வதும், சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு காலநிலை மாற்றத்தால் இயற்கைப் பேரழிவுகள் மக்களை தாக்குவதும் அதிகரித்து வருகிறது. இந்தியாவில் நிலச்சரிவு ஏற்படும் அபாயகரமான பகுதியில் ஒன்றாக மதுரை மேலூர் பகுதி உள்ளது. ஏற்கனவே கிரானைட் முதலாளிகள் மக்களுக்கு வழங்கிய பரிசு இது. அடுத்த அபாயமாய் வருகிறது டங்ஸ்டன் சுரங்கம். லாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டவர்களுக்குத் தெரியுமா இப்புவி லாப வெறி கொண்ட மனிதர்களுக்கு மட்டும் சொந்தமானது அல்ல: பல கோடி நுண்ணுயிர்கள், பறவைகள், விலங்குகள் மற்றும் எதிர்கால தலைமுறைக்கானது என்பது?

●